## அன்னை ஆலயம் எழுந்த கதை


இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு

**THE EVOLUTION OF MOTHER'S TEMPLE**

(Parts of this article were first published in *The Mountain Path*, 2000, pp. 179-87
இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில்
மலை வழி -2000, பக். 179-87 என்ற இதழில் வெளியாயிற்று)

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
-----------------------
டேவிட் காட்மன்
(DAVID GODMAN)

தமிழ் மொழி பெயர்ப்பு
------------------------
சாந்திப்பிரியா
(SANTHIPRIYA)
(nrj_1945@yahoo.com)



# அன்னை ஆலயம் எழுந்த கதை

### இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு

ஸ்ரீ பகவானுடைய தாயார் 1922 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் தேதி மரணம் அடைவதற்கு சற்று முன்பே தான் மரணம் அடைய இருப்பதை அறிந்து கொண்டாள். அவளுடைய பக்தர்கள் அனைத்து நிலைமைகளையும் யோசனை செய்து பார்த்த பின், அவளுடைய உடலை எரிப்பதை விட புதைப்பதுதான் சரியானது என்ற முடிவுக்கு வந்தனர். ஏன் எனில் பெண் சாதுவிக்களை புதைக்கத்தான் வேண்டும், எரிக்கக் கூடாது என்பது சாஸ்திரத்தில் உள்ள விதி எனக் கூறப்பட்டது.

அவளுடைய பூதஉடலை புதைப்பதற்கு சரியான இடத்தைத் தேர்ந்து எடுக்க வேண்டுமே என்பது அடுத்த கவலை ஆயிற்று. ஏன் எனில் அருணாசலேஸ்வரர் ஆலயத்தை நிர்வாகித்து வந்தவர்கள், அந்த மலையின் இன்னொரு பகுதியில் இருந்த ஸ்கந்தாஷ்ரமத்தையும் நிர்வாகித்து வந்ததினால் அந்த மலையில் எங்கும் இறந்தவர்களைப் புதைக்க விட மாட்டார்கள். அதற்குக் காரணம் அந்த மலையே சிவலிங்க மலை எனக் கருதப்பட்டதினால் இறந்து போனவர்களை புதைப்பது அதன் புனிதத் தன்மையை அழித்து





விடும் . அது மட்டும் அல்ல அந்த ஆலய விதிப்படி அந்த மலையில் எந்த விதமான மற்ற உருவ வழி பாட்டையும் அனுமதிக்கக் கூடாது.

ஆகவே அவளை இரகசியமாக அங்கு புதைத்து விட்டிருந்தால் கூட பின்னர் அவளுக்கு ஆலயம் எழுப்பி இருக்க முடியாது. 1930 ஆம் ஆணடில் அந்த சட்ட திட்டங்களைக் குறித்து கருத்து கருத்து தெரிவித்த பகவான், தன் தாயார் இறந்த உடனேயே ஆலய நிர்வாகிகள் அந்த விதி முறைகளைப் பற்றி தன்னிடம் எடுத்துக் காட்டியதாக தெரிவித்தார்.

> “அந்த மலையில் சரஸ்வதி ஸ்வாமிகள் என்பவரும் இருந்து வந்தார். அவர் ஒரு முறை சுப்ரமணிய ஸ்வாமிக்கு ஆராதனை செய்ய இருப்பதாக அறிவிப்பு வெளியிட்டார். ஆனால் அதற்கு எதிர்புத் தெரிவித்த நிர்வாகிகள் அதை நடக்க விடாமல் தடுத்து நிறுத்தி விட்டனர். அவர்கள் கூற்றின்படி அந்த மலை லிங்க ஸ்ரூப மலை என்றும், சாஸ்திர விதிப்படி அந்த மலை மீது அமர்ந்து பண்டிகைகளோ வேறு விதமான உருவ ஆராதனைகளோ செய்யக் கூடாது என்று கூறினர். அதே போல என்னுடைய தாயார் சமாதி அடைந்த பொழுதும் அவளை மலை மீது புதைக்கக் கூடாது என்ற ஆட்ஷேபணையை தெரிவித்தனர். அப்போதும் அவர்கள் அந்த மலையை ஈஸ்வர ஸ்வரூபமானது என்றே கூறினர்.

அவர்களுடைய கூற்று நியாயமானதே என்று கருத்து தெரிவித்த பகவான் பின்னர் கூறினார்

> “ பண்டைய கால பழக்கத்தின்படி இந்த மலை லிங்க ஸ்வருபமானது, அதாவது மலையே கடவுளின் அவதாரம் என





கருதப்பட்டது. அப்படிப்பட்ட பெருமை உலகில் வேறு எந்த இடத்திற்குமே கிடையாது. இதுதான் இந்த மலையின் விஷேசம்."

இந்த விதிமுறை மீறப்படக் கூடாது எனக் கருதியதினால் மாலையில் சமாதி அடைந்த அவருடைய அன்னையை அருணாசலாவின் தெற்குப் பகுதியில் இருந்த மலை அடிவாரத்தில் புதைத்து விடலாம் என முடிவு செய்யப்பட்டது. அந்த இடம் ஏன் தேர்வு செய்யப்பட்டது என்றால் வழக்கமாக சமாதி அடைந்த சாதுக்களை அந்த இடத்தில்தான் புதைத்து வந்தனர்.

முதலில் தன்னுடைய தாயாரை எவருக்கும் தெரியாமல், எந்தவிதமான ஆரம்பரமோ, ஊர்வலமோ இல்லாமல் இரசியமாக எடுத்துச் சென்று புதைத்து விடலாம் என்றே பகவான் நினைத்திருந்தார். தன்னுடைய தாயார் சமாதி அடைந்ததும் அங்கு குமிழி இருந்த பக்தர்களிடம் "எவருக்கும் தெரியாமல், எந்த விதமான ஆடம்பரமும் இன்றி மாலை பொழுது கழிந்து இரவு வந்ததும் இரகசியமாக தாயாரின் உடலை எடுத்துச் சென்று புதைத்து விடவேண்டும். மனித நடமாட்டம் இல்லாத இடத்தில் ஒரு குழி தோண்டி அந்த உடலை அதற்குள் போட்டு மூடிவிட்டு வந்து விட வேண்டும்" என தான் கூறி இருந்ததாக டீ.ஆர்.இராமசந்திரன் என்ற தன்னுடைய பக்தரிடம் வெகு காலத்திற்கு பின்னர் பகவான் தெரிவித்தார்.

ஆனால் எவருக்கும் தெரியாமல் அந்த நடு இரவில் உடலை தூக்கிக் கொண்டு போய் புதைப்பது கடினம் என்பதினால் அதை செய்ய முடியாமல் போய் விட்டது.

அதற்கு பதிலாக அவருடைய பக்தர்கள் சமாதி அடைந்தவளுடைய உடலுக்கு அருகில்

விடியற் காலை நாலரை மணி வரை அமர்ந்திருந்தவாறு திருவாசக மந்திரத்தை ஓதிக் கொண்டு இருந்தப் பின் விடியற் காலை ஐந்து மணிக்கு முன்னர் உடலை கொண்டு சென்றனர்.

முதலில் உடலை புதைக்க ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த இடம் சாலையை ஒட்டி இருந்ததினால் அங்கிருந்த இன்னொரு பக்தரும் கிராம முனிசீப்புமான இராமகிருஷ்ண ஐயர் என்ற அதிகாரி சாலையில் இருந்து தள்ளி சற்று உட்புறத்தில் உள்ள ஒரு இடத்தில் உடலைப் புதைக்குமாறு யோசனைக் கூறினார். அதற்குக் காரணம் அந்த சமாதி சாலை ஓரத்தில் இருந்து உள் தள்ளி இருந்தால்தான் பல வருடங்களுக்குப் பின் அதன் மீது எவரேனும் ஆலயம் எழுப்ப நினைத்தால் அதற்கு தடங்கல் வராது என்பதே.

அந்த யோசனையை ஏற்றுக் கொண்டு ஞானிகளைப் புதைப்பதற்கான விதிமுறைகளை வகுத்திருந்த திருமந்திர நூலின்படி பெரிய குழி தோண்டப்பட்டு அதில் அந்த உடல் புதைக்கப்பட்டது.



தாயாருடன் பகவான்

அன்னை சமாதி அடைந்த பொழுது ஸ்கந்திராச்சிரமத்தில் இருந்த குஞ்சு ஸ்வாமி என்பவரிடம் முதலில் பகவான் விரும்பியபடி ஏன்

தாயாரின் உடல் அடக்கம் செய்யப்படவில்லை என கேட்டதற்கு கூறினார்:-

“அந்த நடு இரவில் சில காரியங்களை செய்ய முடியவில்லை. தாயார் மாலையில்தான் சமாதி அடைந்தார். அதற்குப் பின் பல காரியங்கள் செய்ய வேண்டி இருந்தது மட்டும் அல்ல சில பொருட்களையும் வாங்க வேண்டி இருந்தது. கிராம அதிகாரியின் ஒப்புதலையும் அந்த உடலை புதைக்க இருந்த நிலப் பகுதியின் சொந்தக்காரர்ளான பாவாஜி மடத்தின் அனுமதியும் பெற வேண்டி இருந்தது. இரவில் ஆட்கள் வேறு கிடைக்கவில்லை. பகவான் தன் மனதில் விரும்பியதை கண்டிப்பாக நிறைவேற்றி இருக்க வேண்டும் என நினைக்கவில்லையோ என்று தோன்றுகின்றது. அதற்குக் காரணம் எங்கள் அனைவரையும் ஸ்கந்தாஷ்ரமத்திற்குச் சென்று திருவாசகம் ஓதிக் கொண்டு இருக்குமாறு பகவான் கூறிவிட்டார். காலை உடலை எடுத்துப் போகும் வரை இரவு முழுவதும் நாங்கள் அங்கு அமர்ந்து இருந்தபடி திருவாசகம் ஓதிக் கொண்டு இருந்தோம். நாங்கள் எதை செய்தாலும் அதை முறைப்படி செய்யவே எண்ணினோம். ஞானிகளின் உடலை மண்ணுக்குள் சாதாரணமாக புதைப்பது போல புதைத்தாலோ இல்லை எரித்தாலோ அந்த நிலம் உள்ள ஊருக்கு பாதிப்பு ஏற்படும் என்பது ஐதீகம். ஆகவே திருமந்திரத்தில் கூறி இருந்தபடி குழிக்குள் வரிசையாக கற்களை அடுக்கிவிட்டு அதற்குள் உடலை வைத்து மூடினோம். மற்ற விதிமுறைகள் என்ன என்று அப்பொழுது எங்களுக்குத்





தெரியாது. ஆகவே அவற்றைக் கடைபிடிக்க முடியவில்லை என்று நான் கருதுகின்றேன்."

சமாதிக் குழி தோண்டப்பட்டுக் கொண்டு இருந்த பொழுது தாயாரின் உடல் ஒரு அரச மரத்தின் அடியில் உட்கார்ந்திருக்கும் நிலையில் வைக்கப்பட்டு இருந்தது. நூற்றுக் கணக்கான பக்திகள் வந்து இறுதி அஞ்சலி செலுத்தத் துவங்கியதினால் அவர்கள் வந்து தரிசிக்க அதன் பக்கங்களில் இருந்த பல்வேறு அடர்த்தியான கள்ளிச் செடினளையும் புதர்களையும் வெட்ட வேண்டி இருந்தது.

உடலுக்கு அபிஷேகம் செய்த பின் உடல் புதை குழிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதன் பின் நடந்தவற்றை பற்றி குஞ்சு ஸ்வாமி கூறினார் :-

> புனிதமான வீபுதியும், இலைகளும் அந்த சமாதிக்கு உள்ளே போடப்பட்டு இருந்தன. அதன் மீது உடல் இறக்கி வைக்கப்பட்டது. பகவானும் மற்றவர்களும் சிறிது வீபுதி மற்றும் கற்பூரத்தை உடல் மீது தூவினர். அதற்குப் பின்னர் குழி மூடப்பட்டது. அதன் மீது ஒரு பாறாங்கல்லை வைத்து மூடிய பின் மூடிய கல் மீது ஒரு சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அந்த சிவலிங்கத்தை முறைப்படி ஆராதித்து வழிபட்டனர். பகல் பன்னிரண்டு மணிக்கு அனைவரும் பாலக்கோட்டுக்கு திரும்பினோம். வழி முழுவதும் உற்சாகமாக நாதஸ்வர இசை முழங்க அதன் முன்பு பகவான் மெதுவாக நடந்து வந்தார். சமாதி இருந்த இடத்தில் இருந்து சில நூறு மீட்டர் தூர அளவில்தான் பாலக்கோடு என்ற இடம் இருந்தது. ஆனால் அந்த இடத்தை

அன்னை ஆலயம் எழுந்த கதை

இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு



ஊர்வலம் சென்றடைய சுமார் ஒரு மணி நேரம் பிடித்தது. அந்த ஊர்வலத்தைத் தலைமை தாங்கி நடந்தியது போல முன்னால் நடந்து கொண்டு வந்த பகவானை அடிக்கடி திரும்பிப் பார்த்தபடியும் உற்சாகமாக இசை இசைத்த வண்ணமும் நாதஸ்வரக் கலைஞர்கள் மெல்ல சென்றனர்.

அன்று முதல் அந்த சமாதியில் தினமும் பூஜை செய்யப்பட்டு வந்தது. பத்தாவது நாள் அன்று விஷேச பூஜையும் நடைபெற்றது. மோட்ச தீபம் என்ற விளக்கு ஏற்றப்பட்டு ஆயிரம் பக்தர்களுக்கும் அதிகமாக உணவு போடப்பட்டது. அதன் பின்னர் பகவானுடைய சகோதரரான சின்ன ஸ்வாமி என்பவர் அந்த சமாதியை நிர்வாகிக்கத் துவங்கினார், தினப் பூஜைகளையும் அவரே நடத்தி வரலானார்.

பகவான் ஸ்கந்தாஷ்ரமத்திற்குச் சென்று வசிக்கலானார். சின்ன ஸ்வாமியும் தண்டபாணி ஸ்வாமியும் சமாதிக்கு அருகிலேயே வசிக்க முடிவு செய்தனர். சமாதிக்கு மேலே தென்னை ஓலையினால் வேயப்பட்ட தடுப்பைப் போட்டு ஆலயம் போல தோற்றம் தந்து அதன் அருகிலேயே சமைத்துக் கொள்ள சிறு குடிசையையும் அமைத்துக் கொண்டு அங்கு இருந்தனர்.





ஸ்கந்தாஷ்ரமத்தில் இருந்து தினமும் அரிசி, பருப்பு போன்றவை வந்தன. அதில் சாப்பாடு தயாரிக்கப்பட்டு பூஜைக்கு வேண்டிய





பிரசாதமும் , சாதுக்களுக்கு உணவும் தரப்பட்டது. சில நேரங்களில் உணவுப் பொருட்கள் வர இயலாத பொழுது சின்னசாமி ஊருக்குள் சென்று பிட்சை எடுத்து வந்த பொருட்களை கொண்டு சமையல் செய்து வந்தார்.

அப்படியாக அந்த ஆசிரமம் வளர்ந்து கொண்டே இருக்கையில் இடையிடையே உணவு பற்றாக்குறை ஏற்படலாயிற்று. பக்தர்கள் கொடுத்த உணவுப் பொருட்கள் திருவண்ணாமலையில் இருந்த வாசுதேவ சாஸ்திரி என்பவர் வீட்டில் வைக்கப்பட்டு இருந்தன. அவர் தினமும் ஸ்கந்தாஸ்ரமத்திற்கு சமையலுக்கென உணவுப் பொருட்கள அங்கிருந்து அனுப்புவார். அங்கிருந்துதான் தாயார் சமாதி அடைந்த ஆலயத்திற்கு உணவுப் பொருட்கள் சென்றன.

சில நேரங்களில் ஸ்கந்தாஸ்ரமத்தில் இருந்த சாதக்களுக்கு உணவு கிடைக்கவில்லை. கிடைக்கும் சிறிய அளவு உணவுப் பொருட்களை இரண்டு இடங்களுக்கும் - ஸ்கந்தாஸ்ரமம் மற்றும் தாயார் சமாதி - அனுப்புவது கஷ்டமாக இருப்பதை வாசுதேவ சாஸ்த்தரி கவனித்தார். அதைப் போலவே மற்றவர்களும் கருதினார்கள். ஆகவே அவர் ஸ்கந்தாஸ்ரமத்தில் இருந்த இராமநாத பிரும்மச்சாரி என்பவருக்கு ஒரு கடிதம் அனுப்பினார்.

அதில் அவர் பக்தர்கள் தரும் பொருட்கள் வசுதேவாவிற்கு அல்ல, மாறாக வாசுதேவாவிற்குத்தான் அவர்கள் தருகின்றனர் என எழுதி அனுப்பினார். அதாவது பக்தர்கள் தந்த உணவுப் பொருட்கள் பகவானுடைய ஆசிரமத்திற்குத்தானே தவிற அதன் மற்றொரு பிரிவான தாயாரின் சமாதிக்கல்ல என்ற பொருளில் அப்படி எழுதினார். வாசுதேவா என்பவர் வசுதேவாவின் பெற்றோர்.



## அன்னை ஆலயம் எழுந்த கதை

இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு



இராமநாத பிரும்மச்சாரி அந்த கடிதத்தை எடுத்துச் சென்று பகவானிடம் காட்டவும அவர் தன்னுடைய தாயாருடைய சமாதியில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் சரியானவைதான் எனக் கருதினார். “வசுதேவா இல்லாமல் வாசுதேவா எப்படி இருக்க முடியும் ?” என பகவான் திரும்ப பதில் கூறுமாறு சொல்ல அன்றில் இருந்து சமாதிக்கு உணவு செல்வதற்கு தெரிவித்த எதிர்ப்பதை வாசுதேவ சாஸ்திரி நிறுத்தி விட்டார்.

அதன் பின் பகவான் மலை மீது இருந்த ஆசிரமத்தில் இருந்து வெளியேறினார். அது கடவுளின் சித்தம் என்று கூறிவிட்டு தன்னுடைய தாயாருடைய சமாதிக்கருகில் இருந்த குடிசையில் சென்று வசிக்கத் துவங்கினார்.

ஒரு முறை தேவராஜ முதலியாரிடம் பேசுகையில் பகவான் கூறினார்

“ என்னுடைய தாயாரின் சமாதிக்குப் பின்னர் ஸ்கந்தாஸ்ரமத்தில் இருந்த நான் அங்கு சென்று விட்டுத் திரும்புவது உண்டு. என்னுடைய தாயார் இறந்து போன ஆறு மாதத்திற்குப் பிறகு நான் ஒருமுறை அங்கு சென்று சற்று நேரம் அமர்ந்து விட்டு திரும்பி வர எழுந்தேன். அப்பொழுது எவரோ என்னை அங்கிருந்து திரும்பிச் செல்லக் கூடாது என தடுத்தனர். என்னால் எழுந்திருக்க முடியாமல் கால்கள் இறுக்கமாக இருந்தன. ஆகவே அங்கேயே தங்கி விட்டேன். அப்படிப்பட்ட நிலையில்தான் ஆசிரமம் உருவாயிற்று. எவருக்குத் தெரியும் அது எப்படி வளரப் போகின்றது என்பது ? ”

ஆக கடவுள்தான் அவரை அந்த சமாதி ஆலயத்தில் இருந்து ஸ்கந்தாஸ்ரமத்திற்குத் திரும்பிப் போக விடாமல் தடுத்து நிறுத்தினார்

என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

புனிதத் தன்மைக்கு எடுத்துக் காட்டாக அந்த இடத்தில் கட்டப்பட்ட சிறிய அறையில்தான் பகவான் தங்கி இருந்தார். அதன் பின்னரே அதற்கு அருகில் இருந்த நிலத்தில் அவருடைய பக்தர்கள் ஒரு அறையைக் கட்ட, 1928 ஆம் ஆண்டு முதல் அவர் அங்கு சென்று வசிக்கத் துவங்கினார்.

1920 ஆம் ஆண்டு அந்த சமாதிக்கு அருகில் பெரிய கட்டிடம் கட்ட வேண்டும் என பகவான் விரும்பினார். அந்த இடத்திற்கு அருகில் இருந்த நிலப் பகுதியில் உபயோகம் இல்லை என அதிகம் சுடப்பட்டுவிட்ட செங்கல்களை செங்கல் சூளையில் இருந்து கொண்டு வந்து கொட்டி இருந்தனர். அப்படி உபயோகம் இல்லை என போடப்பட்டிருந்த செங்கல்களை உபயோகித்தே அந்த கட்டிடப் பணி துவக்கப்பட்டது.

உள்ளூர் மக்களுடைய உதவியுடன் அந்த உபயோகமற்ற செங்கல்களை பகவான் ஆசிரம பணிக்கு எடுத்துக் கொண்டார். ஒருநாள் இரவு மக்கள் அனைவரையும் அழைத்து ஒரு தொடர் சங்கிலி போல அந்த கற்கள் குவிந்து இருந்த இடத்தில் இருந்து ஆசிரமம் வரை அவர்களை நிற்கச் சொல்லி, ஒரு பகுதியின் துவக்கத்தில் தானே நின்று கொண்டு அனைத்து கற்களையும் சமாதிக்கு அருகில் கொண்டு போட்டார். தென்னங் கீற்றுகளினால் வேயப்பட்ட ஓலை நான்கு பக்கத்திலும் இருந்த சுவர்களின் மீது அமர்ந்து இருக்குமாறு எழுப்பப்பட்ட அறை பத்து வருடங்களாக அதே இடத்தில் இருந்தது.

1930 ஆம் ஆண்டு முதல் இரமணாஷ்ரம் மெல்ல மெல்ல வளரத் துவங்கியது. பசு மாடம், சாப்பாட்டுக் கூடம், சமையல் அறை, சாமான்கள் வைக்கும் அறை, பாடசாலை, ஆசிரம அலுவலகம்,






மற்றும் புத்தகசாலை என மடமடவென அனைத்தும் 1929 ஆம் ஆண்டு முதல் தொடங்கி 1938 ஆண்டுக்குள் நிறைவேறின.


தாயாரின் சமாதி மீது நல்ல கற்களால் கட்டப்பட எண்ணிய ஆலயம் நிறைவேற்றப்படவில்லை. அப்படிப்பட்ட ஆலயம் கட்டுவது வெள்ளை யானையை வாங்குவது போல் இருக்கும் எனவும், அத்தனை செலவை அந்த ஆசிரமத்தால் தாங்கிக் கொள்ள முடியாது எனவும் எண்ணிய பல பக்தர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

1939 ஆம் ஆண்டு பகவானுடைய அறுபதாவது நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்ட பொழுது அப்படி ஒரு ஆலயம் எழுப்புவதில் தவறு இல்லை என ஒரு பிரிவு பக்தர்கள் கூற, மற்றொரு பிரிவு பக்தர்களோ ஆலய வருமானத்தில் இருந்து ஆலயத்தை விஸ்தரிப்பதை விட பக்தர்கள் வந்து தங்கும் வகையில் அறைகள் கட்டி வசதி செய்து தரவேண்டும் எனவும் வாதாடிக் கொள்ள சூடான விவாதம் நடை பெற்றது.

ஆலயம் எழுப்பக் கூடாது என வாதிட்டப் பிரிவினர் ஆசிரம தேவைகளை பூர்த்தி செய்ய ஆசிரமத்தின் அருகிலேயே இன்னும் நிலம் வாங்கி உணவு தானியங்களைப் பயிரிடலாம் என கருத்துக் கூறினர். ஆனால் அவற்றை எல்லாம் பொறுமையாக கேட்டபடி மௌனமாக அமர்ந்து இருந்தார் பகவான். அவருடைய மனதில்



அன்னை ஆலயத்தின் மேல் உள்ள கோபுரம்



அன்னை ஆலயம் தோற்றம்

என்ன எண்ணம் ஓடியது என ஒருவருக்கும் தெரியவில்லை பகவான் ஆசிரம நிர்வாகத்தை சின்ன ஸ்வாமியிடம் ஒப்படைத்து இருந்த போதிலும் ஆலயத்தின் மற்ற மேம்பாட்டுத் திட்டப் பணிகளை தன்னுடைய நேரடிப் பார்வையில்தான் வைத்து இருந்தார். பகவானே எந்த கட்டிடத்தை எங்கு கட்டுவது, எதை விஸ்தாரிப்பது, எந்த அளவு செலவு செய்து அதைக் கட்டுவது மற்றும் எவரிடம் அந்தப் பணியை தரவேண்டும் என்ற அனைத்தையுமே தன்னிடம் நேரடியாக வைத்துக் கொண்டு இருந்தார். இப்போது உள்ள பல பெரிய கட்டிடங்களுக்கும் பகவானே வரை படங்களைத் தயாரித்துக் கொடுத்து இருந்தார். மற்ற பொறி இயல் வல்லுனர்கள் கொடுத்த வரை படங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆக பகவானைத் தவிற கட்டிட நிர்மாணப் பணிகளில் முடிவு எடுக்க வேறு எவருக்கும் அதிகாரம் இருந்திருக்கவில்லை என்பது தெளிவாகும்.

1930 ஆம் ஆண்டுவரை அண்ணாமலை ஸ்ாமிகளே ஆசிரமத்தில் கட்டப்பட்ட பெரிய கட்டிடங்களின் மேற்பார்வையை கவனித்து வந்தார். தினமும் அவருக்கு பகவானே நேரடியாக உத்தரவுகள் தருவதுண்டு. தினமும் அன்று என்ன வேலை, எந்த அளவில் நடை பெற்றது போன்றவற்றை பகவானிடம் சென்று கூற வேண்டும். ஆகவே பகவானுடைய மனதில் என்ன இருக்கின்றது என்பதை கண்டறியும் பொறுப்பை அண்ணாமலை ஸ்வாமியிடமே சின்ன ஸ்வாமி விட்டிருந்தார்.

“பகவான் அனைத்துக் கட்டிடப் பணிகளையும் நேரடியாக உங்களிடமே கூறுவதால் தாயாருடைய சமாதியில் எப்படிப்பட்ட கட்டிடம் கட்ட வேண்டும், பெரிய அளவிலா அல்லது சிறிய அளவிலா என்று கேட்டுக் கூறு”





என்று அவரிடம் சின்ன ஸ்வாமி கூறினார்.

பகவான் இறுதியாக தன்னுடைய மனதைத் திறந்துக் கூறினார் " அதை பெரிய அளவில் கட்டினால் நான் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவேன்" அதைக் கேட்ட சின்ன ஸ்வாமியும் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். ஏன் எனில் அவர் மனதிலும் தாயாரின் சமாதியில் பெரிய ஆலயம் எழுப்ப வேண்டும் என்ற ஆசை நீண்ட வருடங்களாக இருந்தது. ஆகவே உடனடியாக அதற்கான ஏற்பாடுகளை செய்யத் துவங்கினார். அது மிகவும் நுணுக்கமான கட்டிடமாக அமைய இருந்ததினால் ஒரு பொறியியல் வல்லுனரின் உதவியை நாடினர். அந்த காலத்தில் கட்டிடக் கலையிலும், ஆலயக் கட்டுமானங்களிலும் புகழ் பெற்ற வைத்தியநாத ஸ்தபதி என்பவரிடம் அந்த பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர் கட்டிடம் கட்டுவதில் மிகவும் திறமைசாலியானவர்களை தன்னுடன் அழைத்து வந்திருந்தார்.

அந்த கட்டிடம் கட்டத் துவங்கிய பொழுது ஆசிரமத்தில நிறையப் பணம் இல்லை. பகவானுக்கு தெரியும் கட்டிடம் கட்ட நிறையப் பணம் தேவைப்படும். ஆனால் அதை எவரிடமும் கேட்காமலேயே வரும் பணத்தில்தான் கட்ட வேண்டும் எனவும், ஆசிரமத்தின் பெயரால் பணம் வசூலிக்கக் கூடாது எனவும் சின்ன ஸ்வாமியிடமும் மற்றவர்களிடமும் அடிக்கடி பகவான் கூறி வந்தார்.

ஆனால் கட்டிடம் கட்ட நிறையப் பணம் தேவைப்பட்டதினால சின்ன ஸ்வாமி பகவானுடைய பேச்சைக் கேட்காமல் நன்கொடை வசூலிக்கத் துவங்கினார். அந்த நிலையில் நடந்த ஒரு சம்பவம் குறித்து டீ.பீ. இராமசந்திர ஐயர் என்பவர் கூறியது இது:-

"ஒருமுறை பணப் பற்றாக்குறை அதிகம்





ஆகிவிட்டது. அந்த நேரத்தில் பம்பாய் நகரில் இருந்து சகன்லால் யோகி என்ற பக்தர் முதன் முறையாக ஆசிரமத்திற்கு வந்தார். அவரைப் பார்த்ததும் சின்ன ஸ்வாமி என்னிடம் கூறினார். உடனடியாக நமக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வேண்டும். ஆகவே நாம் மூவரும் ஜம்னாலால் பஜாஜிடம் சென்று நன்கொடையை ஏன் பெற்று வரக் கூடாது ? எனக்கு சகன்லால் யோகியை பரிச்சயம் செய்து வைத்தால் நான் அவரைக் கேட்கின்றேன் ”

சகன்லால் யோகிக்கு அந்த திட்டத்தில் உடன்பாடு இல்லை என்றாலும் தான் முதன் முதலில் ஆசிரமத்திற்கு வந்து உள்ளதால் தனக்கு வெட்கமாக இருப்பதாகக் கூறி விட்டு கடைசியில் அவர்களுடன் செல்லச் சம்மதித்தார். சின்ன ஸ்வாமி பயணத்திற்குத் தேவையான ஏற்பாடுகளை செய்து கொண்டார்.

அடுத்த முக்கிய தடையை இனி கடக்க வேண்டும். பகவானிடம் அது குறித்துக் கூற வேண்டும். அதுவரை சின்ன ஸ்வாமி பகவானிடம் நேரடியாகச் சென்று ஒன்றும் கூறியது இல்லை. எதாவது கூற வேண்டும் எனில் எவர் மூலமாகத்தான் பகவானிடம் செய்தி அனுப்புவார். இம்முறை அதற்கு என்னை பகவானிடம் போகும்படிக் கூறினார்.

“நான் போய் எப்படி பகவானிடம் கூறுவது. நீங்களும் என்னுடன் வாருங்கள்” என நான் சின்ன ஸ்வாமியை அழைத்தேன். ஆனால் அதற்கான தைரியம் சின்ன ஸ்வாமிக்குக் கிடையாது என்பதினால் இன்னும் சிலரை தன்னுடன் அழைத்துக்





கொண்டு வந்தார். அன்று மத்தியான வேளை. பகவான் ஓய்வு எடுத்தபடி இருந்தார். நாங்கள் அவர் முன்பு போய் நின்ற பொழுது எங்களை அவர் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. வேறு எங்கோ வெறிக்கப் பார்த்துக் கொண்டு இருந்தார்.

எங்களில் யார் முதலில் பேச்சைத் துவக்குவது என தடுமாறிக் கொண்டு இருக்கும் பொழுது முனுஸ்வாமி என்பவர் பேச்சைத் துவக்கினார். நீண்ட நேரம் பகவான் பதில் ஏதும் கூறவில்லை. அதன் பிறகு கூறினார் “நான் மீண்டும் மீண்டும் கூறுகின்றேன். என் பெயரில் நன்கொடை வசூலிக்கக் கூடாது. இருப்பதைக் கொண்டு சந்தோஷமாக இருக்கப் பழகுங்கள். எது நடக்க வேண்டுமோ அது நிச்சயம் நடக்கும் ” மேலும் தொடர்ந்தார்.

“ நீங்கள் போய் இதற்கு என்னுடைய அனுமதி இருக்கின்றதா இல்லையா என்று கேட்டால் என்ன பதில் கூறுவதாக யோசனை செய்துள்ளீர்கள் ? ”

சகன்லால் யோகி அந்த தருணத்தைத்தான் எதிர் பார்த்து நின்று இருந்தவர் போலக் கூறினார் “ நிச்சயமாக உங்களுடைய பெயர் இல்லை எனில் ஒரு நயா பைசா கூட வசூல் ஆகாது ”

பிறகு என்ன ஒருவர் பின் ஒருவராக வெளியில் வந்து விட சின்ன ஸ்வாமியின் பயணம் நின்று விட்டது.

அதன் பின்னர் ஒருமுறை பகவான் கூறினார் “நாம் இதுவரை கட்டிய இத்தனை கட்டிடங்களுக்கும் நாம் கேட்டா பணம் வசூல் ஆயிற்று. எது நடக்க வேண்டுமோ அது நடந்து கொண்டு

இருக்கின்றது. எவருடைய முயற்சிகளினால் மட்டுமே எதுவும் நடந்து விடாது.

அது போலவே மற்ற கட்டிட வேலைகளில் பகவானுடைய எண்ணங்கள் எப்படி இருந்தன என்பதை அண்ணாமலை ஸ்வாமி மூலமும் நான் அறிந்தேன். :-

கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் தினக் கூலி பெற்றவர்கள். அவர்கள் வேண்டும் என்றே அதிக பணம் சம்பாதிக்கவேண்டும் என்பதிற்காக தினமும் குறைவான அளவில் வேலை செய்து விட்டு அதிக நாட்கள் அந்த வேலையை செய்து கொண்டு இருந்தனர். ஆகவே ஆசிரமத்தின் பணம் கூலிக்கு ஏற்ப செலவிடப் படுகின்றதா என்பதைக் கண்டு அறியும் பொறுப்பு என்னிடம் இருந்தது.

எனக்கோ அதற்கு முன்னர் கட்டிடம் கட்டும் பணியில் அனுபவம் கிடையாது. அந்த கட்டிடப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களுடைய கூலி மிகவும் அதிகமாக இருந்தது. அவர்கள் வேண்டும் என்றே குறைந்த அளவில் வேலை செய்து பணியை முடிக்க நிறைய நாட்கள் எடுத்துக் கொள்வதாக எனக்குத் தோன்ற அதை அவர்களிடம் எடுத்துக் கூறி ஆசிரமத்தை ஏமாற்றுவது தவறு என்றேன். ஆனால் அது அவர்களுடைய காதில் ஏறவில்லை. அதே முறையில்தான் வேலைகளை செய்து கொண்டு இருந்தனர்.

அவர்களில் ஒருவன் கூறினான். “ நீங்கள் அனைவரும் இந்த ஆசிரமத்தில் ஒரு வேலையும் செய்யாமல் தின்று கொண்டு இருக்கையில் எங்களுக்கு எதற்கு அறிவுரைக் கூறுகின்றீர்கள் ? நாங்கள்



அன்னை ஆலயம் எழுந்த கதை

இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு

பக்கம்-16

மெதுவாக வேலை செய்வதினால் ஆசிரமத்திற்கு நஷ்டம் எதுவும் ஏற்படப் போவது இல்லை ”

மீண்டும் மீண்டும் அவர்களைத் திருத் முயன்றும் தோல்வி உற்ற நான் அது குறித்து முடிவாக பகவானிடம் கூறினேன்.

“ ஆலய கட்டிடத் தொழிலாளிகள் மிகவும் மெதுவாக வேலை செய்கின்றனர். தினமும் நான் எழுதிக் கொடுக்கும் கணக்கின்படி சின்ன ஸ்வாமி அவர்களுக்குக் கூலி தருகின்றார். ஆசிரமத்தின் பணம் இப்படி வீணாகப் போவது எனக்கு ஏற்புடையதாக இல்லை, ஆனால் அவர்களை வேலையில் இருந்து விலக்கி விடும் அதிகாரம் என்னிடம் இல்லை. அவர்கள் செய்யாத அளவு வேலைக்கு நான் கணக்கு எழுதினால் அது ஆசிரமத்தை ஏமாற்றியதாக ஆகாதா” என்றேன்.

பகவான் கூறினார் “ அதற்காகக் கவலைப் படாதே. அவர்கள் ஆசிரமத்தை ஏமாற்றி செய்யாத அளவுக்கு பணம் பெற்றுக் கொண்டால் அந்தப் பணம் அவர்களுக்கு நிலைக்காது. அவர்களிடம் கடைசியில் உளியும், சுத்தியல் மட்டுமே மிஞ்சி நிற்கும். அவர்கள் ஏமாற்றிப் பெற்ற பணம் அவர்களிடம் நிற்காது. அவர்கள் கடவுளை ஏமாற்ற முடியாது. அவர்கள் தங்களைத் தானேதான் ஏமாற்றிக் கொள்ளுகின்றனர் ”

சிறிது நேர இடைவேளை விட்டுக் கூறினார் “ கட்டிட வேலைக்கு ஆகும் செலவு குறித்துக் கவலை வேண்டாம். தேவையான அளவு பணத்தை கடவுள் நமக்குக் கொடுப்பார். ”

பகவான் கூறியது நடந்தது. எத்தனை



**அன்னை ஆலயம் எழுந்த கதை**

இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு

## பக்கம்-18

செலவு ஆனாலும், ஆசிரமத்தில் பணப் பற்றாக்குறை இருந்த பொழுதிலும் வேலைகள் நிற்காமல் நடைபெற்றன. சில நாட்களில் தினக் கூலி தருவதற்குக் கூட அன்றாட நன்கொடைகளை நம்பி இருக்க வேண்டி இருந்தது. காலையில் கூலிக்கு வேலையாட்களை அழைக்கும் பொழுது ஆசிரமத்தில் அன்றைய கூலி தரும் அளவுக்குப் பணம் இருக்காது. ஆனால் மாலைக்குள் கூலி தரும் அளவுக்கு பணம் வந்து சேர்ந்து கொண்டே இருந்தது.

தினமும் பகவான் ஆலயக் கட்டுமானப் பகுதிக்கு வந்து எந்த அளவு கட்டிடப் பணிகள் நடந்து உள்ளன என்று பார்த்து விட்டுச் செல்வார். ஏங்கெல்லாம் குறைகள் இருந்தனவோ அவைகளை சீர் செய்யும்படி கட்டளை இட்டுச் செல்வார். ஒரு முறை கர்பக்கிரகத்தில் கொடி மரம் உள்ள இடத்தில் புதைக்கப்பட்டு இருந்த கற்களின் இடைவெளி அதிகம் இருந்ததை சுட்டிக் காட்டினார். மற்றொரு முறை சுவற்றில் ஏற்பட்டு இருந்த வெடிப்புக்களுக்கு சரியானபடி சிமெண்ட் போடுமாறு கூறினார்.

சிலமுறை பகவான் தானே வேலைகளை செய்வது உண்டு. கற்பக்கிரகம் முடிவுற்றவுடன் அதன் நுழை வாயிலில் பெயர் பொறிக்க வேண்டும் என பகவான் எண்ணினார். அது எப்படி நடந்தது என அண்ணாடலை ஸ்வாமி கூறியது இது:-

> “ கர்பகிருகத்தை நோக்கினால் நுழை வாசலில் இரண்டு யானைகள் இருப்பது தெரியும். அதன் அடியில் உள்ள ஒரு கல்லில் அந்த ஆலயத்தின் பெயர் பொறிக்கப்பட்டு உள்ளதைக் காணலாம். ஆதில் “மாத்ருபூதேஸ்வராலயம்” என எழுதப்பட்டு உள்ளது. அதன் அர்த்தம் தாயின் உருவில் அமைந்துள்ள கடவுள்



## அன்னை ஆலயம் எழுந்த கதை

இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு



ஆலயம் என்பது. அதை பகவான் சமஸ்கிருத மொழியில் என்னிடம் பெரியதாக எழுதிக் காட்டினர். அந்த எழுத்துக்களை கத்தரித்து கல் மீது வைத்து வண்ணம் பூசி விட்டால் ஸ்தபதிகள் அதை அப்படியே செதுக்கி விடலாம் என்பது பகவானுடைய எண்ணம்.

நான் பகவானின் எதிரில் அமர்ந்து கொண்டு எழுத்துக்களைக் கத்தரித்துக் கொண்டு இருந்தேன். நான் என்னுடைய முழு கவனத்தையும் அதன் மீதே செலுத்தி வைத்து இருந்ததினால் என்னை சுற்றி நடப்பதை கவனிக்கவில்லை. பகவான் என்னைப் பார்த்துக் கொண்டே இருந்திருக்கின்றார். மதியம் மூன்று மணி ஆயிற்று. சாதாரணமாக பகவான் சிறுநீர் கழிக்க செல்வது உண்டு. ஆகவே பகவான் எழுந்து வாயிலை நோக்கிச் சென்றார். பகவான் எழுந்ததைக் கண்ட அனைவரும் எழுந்து நின்று கொண்டு இருக்கையில் நான் வேலையில் கவனமாக இருந்தேன். எனக்குப் பின்னால் இருந்தவர் முணுமுணுத்தார் “பகவான் எழுந்து வந்தும் மரியாதை இன்றி எழுந்திருக்கவும் இல்லை, வேலையை நிறுத்தவும் இல்லை ”

அதைக் கேட்ட பகவான் தன் மனதை மாற்றிக் கொண்டு வந்து என் பக்கத்தில் அமர்ந்து கொண்டு என் தோள்களின் மீது தன்னுடைய கைகை வைத்துக் கொண்டார். என் வேலை முடியும்வரை என் பக்கத்தில் அமர்ந்து கொண்டு இருந்தவர் மீண்டும் எழுந்து போய் தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொண்டு விட்டார். அதன் பின் எவரும் எதுவும் கூறவில்லை. நான்

எழுந்து போய் தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொண்டு விட்டார். அதன் பின் எவரும் எதுவும் கூறவில்லை. நான்

பகவானை அவமதிக்கவில்லை என்பதை மற்றவர் உணர்ந்தனர்.

நான் கத்தரித்து வைத்து இருந்த காகிதத்தை எடுத்துப் போய் வாசலில் எங்கு அவற்றை செதுக்க வேண்டுமோ அதன் மீது வைத்து அந்த வார்த்தைகள் மீரு வண்ணம் பூசத் துவங்க அங்கு வந்த ஸ்தபதி அதற்கு ஆட்ஷேபணைத் தெரிவித்தார்.அவர் கத்தினார் “ செய்வதை நிறுத்துங்கள். அந்த வேலையை முறைப்படி செய்யும் திறமை படைத்தவன் நான் இருக்க நீங்கள் எப்படி அதை செய்ய முடியும் ? ” என் பக்கத்தில் நின்று கொண்டு நான் செய்வதை கவனித்துக் கொண்டு இருந்த பகவான் மீண்டும் என்னை விட்டுக் கொடுக்காமல் பேசினார் “ நான்தான் அவரிடம் அதைச் செய்யுமாறு கூறி உள்ளேன் ” .

1949 ஆம் ஆண்டு கட்டிடம் கட்டப்பட்டு முடிந்தது. அதைக் கட்ட சுமார் பத்து வருடங்கள் ஆயிற்று. அந்த ஆலயத்தின் உள்ளே 1928 ஆண்டு முதல் பகவான் வசித்து வந்த பழைய



புதிய கட்டிடத்தின் நுழை வாயில்



அன்னை ஆலயத்தின் உள்ளே உள்ள சன்னதி

அறையை மாற்றி பெரிய பளிங்குக் கற்களினால் கட்டப்பட்ட ஒரு பெரிய கூடம் அமைக்கப்பட்டது.

அன்னை ஆலயம் எழுந்த கதை

இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு

எழுந்து போய் தன்னுடைய இருக்கையில் அமர்ந்து கொண்டு விட்டார். அதன் பின் எவரும் எதுவும் கூறவில்லை. நான்

பகவானை அவமதிக்கவில்லை என்பதை மற்றவர் உணர்ந்தனர்.

நான் கத்தரித்து வைத்து இருந்த காகிதத்தை எடுத்துப் போய் வாசலில் எங்கு அவற்றை செதுக்க வேண்டுமோ அதன் மீது வைத்து அந்த வார்த்தைகள் மீரு வண்ணம் பூசத் துவங்க அங்கு வந்த ஸ்தபதி அதற்கு ஆட்ஷேபணைத் தெரிவித்தார்.அவர் கத்தினார் “ செய்வதை நிறுத்துங்கள். அந்த வேலையை முறைப்படி செய்யும் திறமை படைத்தவன் நான் இருக்க நீங்கள் எப்படி அதை செய்ய முடியும் ? ” என் பக்கத்தில் நின்று கொண்டு நான் செய்வதை கவனித்துக் கொண்டு இருந்த பகவான் மீண்டும் என்னை விட்டுக் கொடுக்காமல் பேசினார் “ நான்தான் அவரிடம் அதைச் செய்யுமாறு கூறி உள்ளேன் ” .

1949 ஆம் ஆண்டு கட்டிடம் கட்டப்பட்டு முடிந்தது. அதைக் கட்ட சுமார் பத்து வருடங்கள் ஆயிற்று. அந்த ஆலயத்தின் உள்ளே 1928 ஆண்டு முதல் பகவான் வசித்து வந்த பழைய



புதிய கட்டிடத்தின் நுழை வாயில்



அன்னை ஆலயத்தின் உள்ளே உள்ள சன்னதி

அறையை மாற்றி பெரிய பளிங்குக் கற்களினால் கட்டப்பட்ட ஒரு பெரிய கூடம் அமைக்கப்பட்டது.

அவர் அமர்ந்து கொள்ள வசதியாக இருக்க பெரிய இருக்கை செய்து வைக்கப்பட்டது. ஆனால் பகவான் அதில் அமரவோ, அங்கு வந்து

வசிக்கவோ விரும்பவில்லை என்பதைத் தெளிவாகக் கூறிவிட்டார். அதற்குக் காரணம் மலை மீதிருந்த குரங்குகள் மற்றும் அணில் போன்றவை தம்மிடம் வரத் தயங்கும் என்றார். மேலும் அந்த இருக்கை மீது அங்கிருந்த கடவுள் சிலையை வைக்கும்படி யோசனை கூறினார். ஆனால் கடைசியாக எல்லோருடைய வற்புறுத்தலையும் ஏற்று அந்த அறையில் வந்து தங்க சம்மதித்தாலும் தன்னுடைய மனக் குறையை கூறிக் கொண்டே இருந்தார்.

சிறிது காலம் கழித்து அந்த கிராமத்தில் இருந்த சிலர் புது வீட்டில் குடியேறிய அவரிடம் கும்பலாக வந்து தரிசனம் செய்தனர். அந்த நேரத்தில் பகவான் ”இத்தனை பெரும் செலவில் கட்டப்பட்டுள்ள அறைக்கு வந்து தரிசனம் செய்ய ஏழைகள் தயங்குவார்கள் என்பதினால் அந்த புதுக் கட்டிடத்தில் ஆறு மாத காலமே தங்கினார். மற்ற மாதத்தில் அனைவரும் வ்நது தரிசனம் பெறும் வகையில் மகா நிர்வாணா என்ற அறையில்தான் இருந்து வந்தார்.

அந்த ஆலயமும் புதுக் கட்டிடமும் தாயாருடைய நினைவுக்காகவே ஏற்படுத்தப் பட்டிருந்தாலும் சின்ன ஸ்வாமிக்கு அந்த இடத்தில் பகவான் சமாதி அடைந்த பின் அவருடைய சமாதியையும் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. அந்த புதிய அறையின் வடக்குப் பக்கத்தில்தான் பகவானுடைய சமாதியை அமைக்க எண்ணம் கொண்டு இருந்தார். ஆலயத்தின் வடபக்க நுழை வாயிலில் பெரிய கதவு அமைத்து அதை பகவான் சமாதிக்கு நுழை வாயிலாக ஆக்க வேண்டும் எனக் கருதி

இருந்தார்.

தன்னுடைய சுயசரிதையில் கே.கே. நம்பியார் “அந்த கட்டிடம் கட்டும் பொழுது வராண்டாவின்

வடக்கு பகுதியில், தேவைப்பட்டால் இன்னும் ஒரு சமாதியை அமைக்கும் வகையில் கட்டிடத்தை அமைத்திடுமாறு சின்ன ஸ்வாமி கூறினார்” என்று எழுதி இருந்தார். வடக்குபுற ஹாலில் பெரிய நுழை வாயில் அமைத்து கட்டிடம் எழுப்ப பகவானுடைய அனுமதியை கேட்டு சின்ன ஸ்வாமி வரை படம் அனுப்பி இருந்தார். ஆனால் பகவான் அதை ஏற்காமல் இப்போது உள்ள நிலையிலேயே அந்த கட்டிடம் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார் என்பதில் இருந்தே பகவான் தன்னுடைய தாயாருக்கு ஆலயம் எழுப்ப ஒப்புக் கொண்ட போதிலும் அங்கு வந்து தான் தங்கவோ, இல்லை தனக்கு அங்கு சமாதி எழுப்புவதையோ ஒரு போதும் விரும்பவில்லை என்பது தெரிந்தது. 1949 ஆம் ஆண்டில் நடந்த கும்பாபிஷேகம் அந்த ஆலயத்தின் உச்ச கட்டமாக அமைந்தது.



கும்பாபிஷேகத்தில் பகவான்

நான்கு நாட்கள் நடைபெற்ற அந்த விழாவில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பல்வேறு இடங்களில் இருந்தும் வந்தனர். இறுதி நாளன்று சுமார் 15000 மக்களுக்கு சாப்பாடு போடப்பட்டது. மதுரையில் இருந்து மதராஸ்(தற்போது சென்னை) சென்று திரும்ப விஷேச இரயில் வண்டிகள் விடப்பட்டன. உள்ளூர் தபால் நிலைய சேவை மையம் ஒரு வார காலத்திற்கு தற்காலிகமாக பெரியதாக ஆக்கப்பட்டது. இரயில் நிலையத்தில்

இருந்து மக்களை அழைத்து வரவும் மீண்டும் திரும்பக் கொண்டு விடவும் இருபத்தி நான்கு மணி நேர விஷேச பஸ் வசதி அந்த நான்கு

நாட்களிலும் செய்யப்பட்டது. பூரி சங்கராச்சாரியா தலைமையில் இருநுர்று பூசாரிகள் அந்த விழாவை நடத்தி வைத்தனர். பகவான் தானே ஸ்ரீ சக்கரத்தில் சக்தி ஏற்றி அதை மூல ஆலயத்தில் பிரதிட்சை செய்தார். 1922 ஆம் ஆண்டு சிறு குடிசையில் தேங்காய் மர ஓலைகளில் பின்னப்பட்ட கூரையின் அடியில் அமைந்து இருந்த ஆலயம் வளர்ந்து நின்றது.

பகவான் அது குறித்து டீ.பீ. இராமசந்திர ஐயரிடம் பேசுகையில் “ நான் அந்த உடலை விடிவதற்குள் ஆரவாரம் ஏதும் இன்றி புதைத்து விடும்படிக் கூறி இருந்தேன். ஆனால் எது நடக்க வேண்டுமோ அது நடந்து விட்டது. பாருங்கள், ஆரவாரம் இல்லால் புதைக்கப்பட்ட உடல் மீது எத்தனை கலகலப்பான கட்டிடங்கள் எழுந்து விட்டன.



# அன்னையின் ஆலயம் எழுந்த கதை

### இரமண மகரிஷியின் வாழ்க்கை வரலாறு

# THE EVOLUTION OF MOTHER'S TEMPLE

**(Parts of this article were first published in *The Mountain Path*, 2000, pp. 179-87**
இந்த கட்டுரையின் சில பகுதிகள் முதலில்
மலை வழி -2000, பக். 179-87 என்ற இதழில் வெளியாயிற்று)

மூலக் கட்டுரை ஆங்கிலத்தில்
டேவிட் காட்மன்

**Original in English**
**DAVID GODMAN**

தமிழ் மொழி பெயர்ப்பு
சாந்திப்பிரியா
(nrj_1945@yahoo.com)

**Tamil Translation**
**SANTHIPRIYA**
(nrj_1945@yahoo.com)